பிஸ்மில்லா ஹிர்றகுமா னிர்றகீம்

மெய்ஞ்ஞான ரத்தினாலங்காரக்

கீர்த்தனம்.

காயற்பட்டணமடுத்த குருவித்துறை

பட்டாணிமுகம்மது லெப்பையவர்கள்

குமாரர்

முகம்மது ஹம்சாலெப்பை

அவர்களியற்றியது.

அக்கானி கோசுமுகம்மது முதலாளி யவர்கள்

விருப்புற்றுக் கேட்டுக்கொண்டமையால்

கண்ணகுமதுமகுது முகம்மதுப் புலவரவர்

களாற் பார்வையிடப்பட்டது.

சென்னை - இட்டா,

பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்

சக்கரவர்த்தி பிரஸ்.

நெ. 189, தங்கசாலை தெரு, மதராஸ்.

இதன் விலை] 1947 [ரூபா 1.

ரிஜிஸ்டர் காபிரைட்.

இஸ்லாம் மார்க்கப் புத்தகங்கள்.

	ரூ.	அ.
முஹ்யித்தீன்மாலை 5-முனாஜாத்து சேர்ந்தது	0	10
நசீஹத்துல் இசுலாம் ஹனபியா	0	10
மேற்படி ஷாப்பியா	0	10
மெஞ்ஞானரத்தின அலங்காரக் கீர்த்தனை	1	0
திருமுடியிறக்கிய ஹதீது	0	3
மரணவிளக்கம் மனதை துலக்கம்	0	5
நசிஹத்துநாமா	0	3
காசீம்படைப்போர்	0	4
சக்கறுத்து நாமா	0	3
முஹியித்தீன் ஆண்டவர்	0	3
சத்துரு சங்காரம்	1	0
சையித்தூன் கிஸ்ஸா	0	10
ஞானமணிமாலை	0	6
ஷன்மூன்றலியார் கிஸ்ஸா	0	6
பெண்புத்திமாலை	0	3
தொழுகை அடவு	0	4
சலவாத்துப்பாட்டு	0	3
தொழுகைநாமா	0	[illegible]
இரத்தினமுஹம்மது காரணசரித்திரம்	0	10
தீதாறுமாலை	0	5
பிஸ்மில் குறம்	0	8

இட்டா -. பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்,

189, தங்கசாலைத்தெரு, மதராஸ்.

பிஸ்மில்லாஹ்.

இஃது

முச்சுடரின் துதி.

இரட்டை யாசிரிய விருத்தம்.

அஹமதுஹது வாஹிதா யடிமுடியு நடுவுமல்
லாறணு லாதமாகி

யருட்பால் பொருட்பால் காமப்பா லானதோ
டலிபுலா மீமுமாகி

நகையுந்தி யிருதயத் தோடுமுண் டககமல
நாட்டம் பொருத்தமமையல்

நற்ககன புவியில்தாய் தந்தைநா மென்றபெயர்
யாஹூம் மெனுந் திக்குறுமாகிச்

சுகமான கலிமாவி லுயிரெழுத் தானமுச்
சுடர்மூன்று ஹுறுபு மாகிச்

சொல்லுமக மொத்துநின் றொளிருமிரு தத்துவத்
துட்பொரு ளிணைப் பணிகுவாம்

அகமதனை யோட்டியருள் மழைமாரி சொரியுமெம்
மகுமதரு முன்னிற்கவே

அபுரூப மானகுண மென்னுமூ ராளுகண்
மணியே முகியித்தீனே.

இதவுமதி

முச்சுடர்ப் பிரகாச மச்சுமா ளிகையா
சனத்திலுறு மோன பொருளே

அச்சுட ரெலுங்கட லடங்கிடா வான்பொருளே
அஹதுகில் யான பொருளே

மெய்ச்சுடர்ப் பொருளேயோர் தச்சுமா ளிகைக்குளே
விளங்கவங் துற்றபொருளே

பச்சைமுத் தொடுவெள்ளை யானகற் பொருளேமா
ப்கலிரவ தானபொருளே

உச்சியின்கீழ்நின் றிலங்குபொரு ளேச்சொலு-
மூலகெலா நிறைந்த பொருளே

இச்சைகொண் டென்னுயிர்க் குயிராகி வந்தபொரு
ளிறையொரு வணேப்பணிகு வாம்

அச்சமதை யோட்டியருள் மழைமாரி சொரியுமெல்
வகுமதரு முன்னிற்கவே

அபுரூப மானஞ்ண மென்னுமூ ராளுகண்
மணியே முகியித் தீனே.

முற்றிற்று.

பிஸ்மில்லாஹ்.

மெய்ஞ்ஞான ரத்தினலங்காரக் கீர்த்தனம்.

காப்பு - வெண்பா.

தானய்த் தனியவனய்த் தன்மயமாய்த் தற்சொரூபமாய்த்
தானய்த் தனிநினைவாய்த் தானனய்—தானேநீ
சல்லல்லா வானநபி சாதாத் தவரொளியிற்
சூல்லும் படைத்துணையே சூர்ந்து.

இரட்டையாசிரிய விருத்தம்.

உஜூதுடன் சொல்லும் கிதபக்கா வானதோர்
முஹலாபத்து லில்ஹ வாதி
யுடையோன் கியாமுஹூபி நபுசிகி யுவப்பான
வஹதாநிய் யத்த தனுடன்
நிசமாம் ஹயாத்தோடு மில்மூம் இருதத்து
நேத்திருத றத்து ஸம்கு
நிகழ்த்துபஸ றுன்கலாம் ஹைபினேடு ஆலிமுன்
முரீதுன்கா திறுன்ஸ மீவுன்
ஒசியா பஸீறுன் முத்தக்கல்லி முன்னிவைக
ளொன்ரு யெழுந்த பொருளே
யுலகினுன தப்துமார் செய்பிழையு மென்பிழையு
மொக்கவே நீ பொறுத்தே
துஜநிகரு மெய்ஞ்ஞான ரத்திரன வலங்கார
கீர்த்தனத் தொடர் பாடவே
சொல்லுதவி நல்லுதவி செய்தருளு வாய்வேத
சுத்தனே காப்பு நீயே.

———

ஹக்குத்த ஆலாவின் வன்னிப்பு.

1-வது பதம்-இராகம்-ஆனந்தபைரவி-ரூபகதாளம்.

பல்லவி

அகூது பில்லாகி மினுஷ்ஷைத்தா னிற்றஜீம் வபிநஸ்தகீன்
பிஸ்மில்லா சிற்றகுமா னின்றகீம்

அநுபல்லவி.

ஷுகூதினில் ஞானச் சுடர் விரிந்தோனே
சூட்சம் அல்லாகு லத்தீபுன்மஜீ தானோனே
தகுதி சுபுஹா னல்மலிக்குல் குத்தூசென் டுபானே
தனியவ ஹையுல் கையூமான வேனமுன்னே அகூ

சரணங்கள்

1 ஹன்னானும் மன்னானுயா தையான்-ஹக்குல் மூபீனெனும்
காதிறுல் றுக்ததிறு யாபுர்ஹான்
கன்னாசைநீக்கும் கனியுல் அலீமெனும்-அஸீஸுல் ஜப்பா
கருணை தங்கிய கபூறுற்ற கீமெனும் [றெனும்

என்னாளும் ஏகறப்பில் ஆல மீனெனும்
இலங்கும் ஜல்லஜலாலுகு நீயெனும்
முன்னா லொருறாக்கத் தாகிய கோகனனும்
முமீனு முஹைமினுல் முஹில்லு மீத்தெனும். அகூ

2 அல்லாமுல் குயூபான நாதனே அஹதுஹதுவா ஹிதாய்
அகன்ற சத்தாறுல் குயூபெனும் வேதனே
எல்லாம் கபூறும் ஷுக்கூறு மானோனே-எங்கெங்கும் சுப
இறந்த தப்பியல் அகுலாவா னோனே [ஹானோனாய்

அல்லாகு அக்குப றென்றும் பெரியோனே
ஆரும்புகழ் மஹிக்கும் மக்ஸ தானோனே
எல்லாம் ஜஹீமுன் மதீனுன சிறந்தோனே
யேகனே காலிக்குற் றூஹிக்கு மானோனே. அகூ

3. ஹையுன் ஆலிமுன் முக்துன் காதிறுன்-ஸமீவுன் பஸீறுன்
கனத்ததோர் முத்தக்கல்லி முன்னெனும்
மெய்யுள்வந்திடும் கபூறுற்றகீமெனும்-மலிக்குன்னஸீறெலும்

செய்யும் அற்றகு மானுத் தையானெனும்
சேரும் றப்புல் அறுஷில் அலீமெனும்

4 ஆஷிக்கு மஃஷூக்கு மானோனே-அவ்வல் ஆகிர்வல்பாத்தி
அருமை அல்லாமுல் குபூபெனும் பெரியோனே [னாய்
தோஷிகள் பிழைபொறுக்கும் ராஜனே-தொண்டன் ஹம்சா
துணையொடு மணவறையி லாள்வோனே [வைக்காத்துக்

பாஷைகள் பலவயாக நிறைந்தோனே
பத்தா குல்அலீ மாகிய நீதனே
கோஜமு மெமதைக் குருவாய் வகுத்தோனோ
குன்னென்ற சொல்லைக் கொண்டெல்லாம் படைத்தோனே.

இன்ஸானுண்டான வியல்பு.

2-வது பதம்-இராகம்-கர்பி-ஆதிதாளம்.

பல்லவி.

பிஸ்மில்லா ஹிற்றகு மானிற்ற ஹீமெனும்
பெரியவன் திருநாம மோதிடுவோம் ஆதி
பெரியவன் திருநாம மோதிடுவோம்.

அநுபல்லவி

அஸ்மா அல்ஹும்தா யனைத்தையும் படைத்தே
அடிமுடி நடுமுதல் நிறைந்தோனேர
இஸ்மே அல்லாகு ஓங்கும் வல்லபமாய்
இலங்கும் பொருள் றப்பில் ஆலமீனே. பிஸ்

சரணங்கள்

1 அறிவீர்க னின்சான் படையுண்ட கோலம்
ஆனதோ ரெழுநான் கட்சரத்தால்
நெறியாய் அலிபுஜன் நடுவாக நீட்டியே
நேசமுடன் பேதேயால் புருவம் வைத்தான். பிஸ்

2 காணிந்தே நெற்றியாய்க் கனத்தஜிம் தலையாய்த்
தோனும் ஹேஹேரண்டும் தோட்புயமாய்ப்
பூணும் தால்காணும் புகழ்வலா திடதுகால
பொருத்தினன் றேஸேயும் விலாக்குடையாய் பிஸ்

3 ஓதிடும் சீன்ஷீ முன்நெஞ்சு மார்பாய்
உணரும் ஸாதுலாத் வலதிடது காதாய்
நீதியுடன் தேலேயும் கால்ஹூளி ரண்டுமாய்
நினைத்துக்கொள் ஐன்கொய்துக் கொடுங்கையென்றை.

4 கண்டிடும் பேய்நம்மள் கைவிரலாகிக்
கனத்த காபுடது கைவிரலாகி
விண்டிடும் காவதே முதுகந் தண்டாகி
வீறுடன் லாம்ரண்டு முழுங்கலாய் பிஸ்

5 உண்மைமீது மூளை யுயிர்மக்காம் றூனைய்
உந்தியே வாவுகல்பு உவந்தஹேயாய்
செம்மைலாமலிபு சேரும்கல் பழிவில்லைச்
செப்பினுர் ஏறாஹென்று செம்மல்ரசூல் பிஸ்

6 எழுநான்கட் சுரத்தைக் கொண்டிருத்தினன் ஜடத்தை
யிணங்கிக் கலிமாலாவல் கால்பூட்டிப்
பழுதில்லா மூலம் இலாகா இல்லாவுடல்
பகர்ந்தேன் அட்சரம் அல்லாமுக மறிவீர். பிஸ்

7 சொல்லுங் கலிமா இலாகஇல் லல்லாவுடன்
சூட்ச ஹறுபிருபத் தொன்பதுமாய்
நல்லான் முகம்மதுற்ற சூலுல்லா தனிசேர்த்து
நாட்டினன் ஹம்சாவிதிற் காட்டினதே ஆதி. பின்

3-வது பதம்-இராகம்-ஸஹானு-ரூபகதாளம்

பல்லவி

பூண்டமட் டின்பம் பொங்குப் புகழ் தெனகலிமா
ஏன்தமட்டிலு மிறையை மனமே நீதுதி. பூண்ட

அநுபல்லவி

ஆண்டவனருள் தோன்று முகம்மதர்
அஹதத்தினி லுஹதாகியே லஹதத்தெனும் துவைப்பூ

சரணங்கள்.

1 பாரும்நாசூத்து மலக்கூத்து ஜபறூத்துப்
பகரும் லாகூத்து ஹாஹூத்து பாகூத்திலும்
பாசமஜெம் கூத்தில் நேசந்தரு மென்மனமே
பங்கமிலை யங்கமொரு தங்கம் அங்குமிங்கும்.

2 ஆதிக்கு முன்னனாதியாய் நின்றவனே
அஞ் செழுத்திலும் பிஞ்செழுத் தானவனே
யாஜி புல்லுஜூத் தாகிய நாதனே
வகைமும் கினுமும் தனிலும் ஜெகமும்புகழ்ஆரிபிலும். பூ

3 ஷம்செனும் வடிவான பிரகாசரேநல்
றம்செனும் பொருட் சூட்சதமாய் நின்றோரே
தாத்துக்குள்ளூறுத் தோத்திர மானோரே
சற்குருவே மெய்க்குருவே நற்குருவே ஹக்கனருள். பூ

4 ஆதம் சிரசில்நின் றைம்பத்தோர் தலைமுறையின்
அப்துல்லா ஈன்ற அண்ணல் முகம்மதரே
தர்சன் ஹம்சாலப்பை தோஷ மகற்றிடுவீர்
தருவேயுயர் குருவே திருமரு வேநபியகுமூதரே. பூண்

4-வது-பதம்-இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி

சேர்க்கு நாளைச் சென்னப் பதியி லெங்களைச்
செய்யி தரும தென்றன் பிரேயாறசூலே. சேர்க்

அநுபல்லவி

மார்க்க முறைசேர் மதினாநன் னகரில்வாழ்
மண்டலஞ் சென்றறுஷில்மொழி விண்டோரே
பிண்டம தென்றுமல் ஹம்தாய் நிறைந்தோரே. சேர்க்

சரணங்கள்

1 ஆதியொளி யிற்பிரிந் தனேகரூப மாயெழுந்தீர்
அனாதியிலும் நீரொளித் துறைந்தீர்
சூதிறசூ லாய்ப்பிறந்தீர் துணைசேர் நால்யார்களுடன்
தூண்டாமணி விளக்கொளி யாயிருந்தீர்

ஆதமா னாதல மைந்த நீதரே
வேதமே முழங்கு மக்க ராஜரே

பாதமே தருவீரெனக் காதரவு நீர்தானையா
பட்சமோ டிச்சைதந் தச்சமில் லாநபி
யுச்சித மாமகு மூதுமு கம்மதே சேர்க்

2 இல்முல் எக்கீ னைதுடன் ஐனுல் எக்கீன் றனையறிந்து
ஹக்குல் எக்கீ னென்றதி லேதெளிந்து
கமாலுல் எக்கீன்றனிற் சேர்ந்து காட்சிகளை யானருந்தக்
காட்டும் யாஹபீபே யருள்புரிந்து.

குல்லும் றசூவே நும்மொளி யாலே
யெல்லுயிர்க்கும் றப்பானவன் றாதரே நற்

கல்லுமா னுடும்பும் பேசும் காத்திமுல்லன்பி யாவனேரே
கற்பக தருவே சொற்பிர காசரே
நற்புகழ் யாமகு மூதுமு கம்மதே சேர்க்

3 அன்று நுக்கத் தோரலியாய் ஆனதிரு வெண்மணியே
யென்றைக் குமைக் காண்பேனோ வென்கண்ணில்
இன்றுமனந் தேடிவாடி யிருந்தேனினி யென்செய்வேன்
எங்கள்யா ஹபீபே யுமையெண்ணிக்

கண்டுசர்க்கரை தேனிலு மினிதாய்
நன்று செய்யும் யாறசூ லென்மீதே

தொண்டனும் ஹம்சாக்குமது வென்றிதரு வீரெந்நாளும்
வந்தர சானுமென் னந்திவி னோதரே
சுந்தர ராஜரே செம்மல்மு கம்மதே. சேர்க்

5-வது-பதம்-இராகம்-அபுரூபகம்-ஆதிதாளம்.

பல்லவி

சாதரத் சாதாத் சாதாத் செய்யிதஸ் சாதாத்

அநுபல்லவி

சாஜாதாத் திறையருள் வேதா குறைஷியர்
நாதா நபிகளின் மூதா செய்யிதஸ். சாதாத்

சரணங்கள்

1 அலிபொடு லாமொடு ஹேயொடு மீமொடு
அழகொளிர் தாலொடு மேவிய நாதரே

கலியொடு மாவொடு கருணை துலங்கிய
ஹாமி தருமது முகம்மதே செய்யிதஸ் சாதாத்

2 ஸீனொடு நூனொடு காபொடு ஹேயொடு
மீமொடு தேயோடும் சுனன் ஹிம்மத் தானதே

சுந்தர மேவிய ஐந்தரு வாகிய
சிங்கமே மணிமுடி தங்கிய செய்யிதஸ் சாதாத்

3 மீமொடு ஹேயொடு மாவொடு தாலொடு
கூடிய மானுடர் கோல முகம்மத்

மண்ணொடு நீரொடு காற்றொடு தீயொடு
விண்ணொடு கூடிய அண்ணலே செய்யிதஸ் சாதாத்

4 ஹாலொடு ஸீயொடு கூவொடு கும்மொடு
தம்மொடு நம்மொடு கமல மிலங்கிய

ஹம்சொடு றம்சொடு ஷமசு துலங்கிய
ஹாமீமு கம்மதே ஹம்சாக் கருள்புரியும். சாதாத்

6-வது-பதம்-இராகம்-ஷேமா-அடதாளசாப்பு.

பல்லவி

ஹூவென் றோதிய வளம்புரிக் குள்ளே
ருன்கு தாத்தொளிவே யருந் தெளிவே

அருள் விழியே தெளிவாய்
ருன்னென்றே ருன்னென்றோர்
சத்தம் மன்னவ னேசையுமே. ஹூ

அநுபல்லவி

அறியும் நாசூத்து மலக்கூத்து ஜபறாத்து
அடுத்தலா கூத்திலும் உயர்ஹா ஹூத்திலும்
பாகூத் ஜெம்கூத்திலும் தமகூத்திலும்

நெறியுடன் நெறியுடன் நெறியுடன்
நின்றிலங்கிடு மெய்ப்பொருளே. ஹூ

சரணங்கள்

1 எழுதமுன் னெழுத் தான பழம்பொருள்
எங்கும் நிறைந்தவனே மறைந்தவனே
உறைந்தவனே சிறந்திட்ட

பழுதில்லாப் பழுதில்லாப் பழுதில்லா
றுபபில் ஆலமீ ஞனேனே ஹூ

2. கல்பெனுங் கடல்தன்னி லிலங்கிய
காரணமதியே அருள் நிதியே வரும் கெதியே துதியே

சுல்பிலே சுல்பிலே சுல்பிலே நின்றொளிர்
சூட்சம தானேனே ஹூ

3. ஷம்ஷ தாத்தொளி வானதி லாடிடுங்
சாந்த சட்சுடரே அருட்சுடரே யென்மெய்ச்சுடரே

றம்ஸெனும் றம்ஸெனும் றம்ஸெனும் பொரு
ளொன்றாகி நின்றோனே ஹூ

4 வைய மீதினிற் பைய லுனைத்தேடி
வாடினேன் விதியேஎன்றன் மதியோ இதுசதியோ வருளாய்

மெய்யனே மெய்யனே மெய்யனே யெங்கும்
துய்ய நாயகனே ஹூ

5 தாசனு மிந்த ஹம்சா லெப்பைக்கொரு
தம்பமீ வரவே யருள் தரவே துய ரறவே யுதவிசெய்

வாசனே வாசனே வாசனே மக
ராசனே நேசனே. ஹூ

7-வது பதம்-இராகம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி

யாமுர்ஷிதத் தாலிபீன்
எங்கு மிலங்கும்வல் வாஸிலீன்
யாஹூஜஜத்தல்-ஆஷிக்கீன்-யாஷெய்கே
யாசபுவத்தல் ஆபிதீண் யாமுர்

அநுபல்லவி

யரீ புர்ஹானல் ஹகீக்கத் யாக் காஷிபல் மஹரிபா
அவ்வல் ஆகிர் லாகிர் பாத்தின்
அகுமத் ஹாமித் அன்பர்க் கிரீட
யாதௌலத்தின் பேரரே யா ஷெய்கே
யாமுஸ்தபா பேரரே யாமுர்

சரணங்கள்

1 சத்தம் குன்குன் கிண்கிண் ஜெண்ஜெண் மன்மன்
மகுபூபல் ஆலமீன் யர் அமீறல் ஆரிபீன் யாஷெய்கே
நித்தம் கம்கம கம்கம் கும்கும் பமபம் தமதும்
ஷர்சொளி றாகுல் குதுசியின் திருவாசரே-யா,ஷெய்கே

யாக் குத்வத்தல் ஹகபர யாமல்ஜஅல் குறபா
யாஹன்னன் மன்னன் தையா னருள்
ஆசை வலம்புரி யோசையின் சிற்றே
யாகிபுலத்தில் ஆரிபீன் யாஷெய்கே யாமுர்

2 யா ஆலியல் ஹிமமியா நாமூசல் ஹும்மி
யா வாசி அல கறயி-யா ஷெய்தே
யா முக்ஜீலல் மதரியா முஹ்வினல் பஷரி
எங்கள் யா அப்துல் காதிரி யா குத்பே

யா பாரிஜல் குறபி யா ஹாதியல் மௌலானா
யாஹபீப் யா ஷரீப் யாசு
கிய்யி யர் வீத்தீக்கு யா மஃஷூக்
யா குத்வத்தல் முஹக்கி கீன் யா கௌதே யாமுர்

3 யா சுல்தானல் மாசிவீன் யா காமூஸல் வாகிலீஸ்
யா மக்ஸூதஸ் ஸாலிகீன்-யாஷெய்கே
யா ஸாலிஹல் அஹ்வால் யா ஸாதிக்கல் அக்வால்
யா ஸைபல் லாகில மஸ்லூல் யாகுத்பே

யா ஸாகிபல் குதறத்தி யெளியேன் ஹம்ஸாக் ரூமதருள் மு[த்தி
ஹூம் யாஹிம் யாஜூ மென்றதற்கப்பால்
செப்பிய மெய்ப்பொருள் தாரும்
யா சுல்தான் முயித்தீன்-யா ஷெய்கே (யாமுர்)

8-வது-பதம்-இராகம்-செஞ்சுருட்டி-அட்தாள-சாப்பு.

பல்லவி

பஞ்ச பூதங்க ளஞ்சதின் பங்கைப்
பாங்குடன் சொல்லக் கேட்பீரே (பஞ்ச)

அநுபல்லவி

நெஞ்சில் வாழ்ந்திடும் நேசமாயதில்
மோசமே யறிவீர்களே (பஞ்ச)

சரணங்கள்

1 வஞ்ச னிபுவீசின் வாது சூதுகள்
வாயிற் பேசிடு மாந்தரே
செஞ்ச நபனுயிர் பிடிக்கமுன் னுன்னுள்
அஞ்சி லொன்றை நீ ரறிகுவீர் (பஞ்ச)

2 நரம்புடன் வகை தொலி யெலும்பொடு
நாவிலும் ரோம மண்ணென் றறி
வருமேமுளேயோ டுமிழ் நீர் வேர்வையும்
சிறுநீர் விந்தொடு ஜலமதாம் (பஞ்ச)

3 சோம்ப லஃதுடன் செமித்த வுறக்கமும்
பசியுந் தாகமும் நெறிப்பறி
துளும்பலுடனே கொட்டாவி னடுக்கமும்
சொறியும் ஆசைவொடு காற்றதாம் (பஞ்ச)

4 ஆசை பசியொடு கோபங் கிருபையும்
பயமும் ஆகாய மிவையெல்லாம்
தாசனுமிந்த ஹம்சா சொன்னசொற்
றரணி மாந்தர்கா ளறிவீரே. (பஞ்ச)

9-வது-பதம்-இராகம்-ரூபகதாளம்.

பல்லவி

அஞ்தந்திர் துங்கலிமா வந்தென் சிரசினி லன்புற
வுந்தம் பதமே தந்தெனே யாள்வாய்-இன்னம்
வனேவரக் காணேனினி நானேமயலானேன்சகி
மானே யருள்றேனெ யெனியேனே நானென் செய்குவேன்

அநுபல்லவி

முந்தத்திரு அஹதர்னத்தில் வந்துற்றிடும் அலிபானது
பிந்தத்தானொளி வாகியே தெளிவாய்—எங்கும்

மணியாய்மர கதமாய்மயில் வடிவால்கிக் கீலாயதின்
ஒளியாயுறும் தெளிவாய்ப்பின் வெளியாய்வரும் குருநக்
பீமானோர் நறைசேர்ஹர பீமானோர்

மணிமுடி ராஜர் மகராஜர் மணவாசர்
மறைசேர் விசுவாசர் மயில்வேஷர்-உயர்
ஹாஷீம்குல காசிம்நபி (அந்தஞ்)

சரணங்கள்

1 ஒளிவான வுஜூதே விழியா மெங்கும் நிரம்பியதின்
தெளிவேயுல கெங்கும்பிர கரசம்-வரும்

ஆகம்முறை நாதம்மறை வேதம்நிறை போதம்ஜம்
பூதம்பல கீதங்கமழ் காதம்நபி பாதந்தர
வருவீரே நிதமருள் தருவீரே-அருள்

தங்கும்மிருள் மங்கும்நறை பொங்கும் சாகி
பிங்குவர வெங்குங்குருவாய்ச் சங்கைசேர்
மங்கும் குடையிடும் நந்நபி (அந்தஞ்)

2 மண்விண்ணொடு தண்ணீரும்காற் றோற்றதீ-யாகாசம்
மங்கெங்கிடா வாழ்வைந்தி னுயிர்-அதில்

உருவாகவே கருவாகவே மருவாகவே குருவாகவே
அருளாயுல கெங்கும்மொரு பொருளாகவே வருமாநபி
தூதானோர் அருள்மகு மூதானோர்-எங்கள்

கத்தன்னருள் நித்தம்பரி நித்தம்பக சுத்தம்நபி
வித்தம்முயர் சித்தந்தனில் முத்தந்தரும்
மெத்தப் பலனூர் நந்நபி (அந்தஞ்)

3 முத்தோடுறை பச்சைப்பவ ளமதாய்வரு
முச்சுடரின் மெய்சுடரா யெங்கும்பிர காசம்-அதைக்

கண்டே யமுதுண்டே மனம்விண் டோர்முனம்
சென்றேறியே யொன்றேயறி யானந்தத் தொண்டே

னெனைக்காத் தருள்புரி நேசநபி
மக்கப் பதியானோர் இறையருள் சொர்க்கப் பதியானோர்நிதம்

நாடும்பயல் வாடுந்துய ரோடும்படி தேடும்நத
பாடும்பயல் ஹமஸாக்கருள். (அந்தஞ்)

10-வது-பதம்-இராகம்-தேசிகதோடி-ரூபகதாளம்.

பல்லவி

ஈமானொளி தாராய் ஈமானொளி தாராய்

அநுபல்லவி

ஜாமிகுல்இஸ்ம் சகலதத் துவமாய்ச்
சார்ந்தமுச் சுடரே — ஈமான்

சரணங்கள்

1 காமில்மு கம்மலெனுரம்நபி
கட்சியை நேராய்க்
கருதுவாங் கமலத்திற்
கண்டிட நூறாய் — ஈமான்

2 மூந்தவுமக் கூரிருளதில்
முங்கினநூறோனே
பிந்தவுமே நபியாய்வந்து
பிரிந்தே னீதானே — ஈமான்

3 பூரணத்தி னடிமுடியாய்ப்
பொங்கினின் றோனே
காரணத்தின் காரணனே
கண்ணே கண்மணியே — ஈமான்

4 பார்க்குமிடம் படைப்புமுதற்
பரந்தெழுந் தோனே
காக்கும் லப்பே கருவில்யார்க்கும்
ஹக்கே மெய்ப்போருதே — ஈமான்

5 எவ்வுயிர்க்கும் விளக்கொளியாய்
எரிந்த மெய்ச்சுடரே
அவ்வுயிரில் யானொருவ
னுதரித் தருள்வாய் — ஈமான்

6 வேதமெல்லா மோரெழுத்தாய்
விளக்கிநின் றோனே இந்த
வேதியன் ஹம்ஸ்ரக் குன்னருள்
வேந்தனே தாராய் — ஈமான்

11-வது-பதம்-இராகம்-நீலாம்புரி-திரிசிரகதிதாளம்.

பல்லவி

குன்னென்றசொற் குணமறிந்து
ஹூவென்றதை யோது குன்

அநுபல்லவி

மன்னறப நபுசகு பகத் அறபறப்பகு
அன்ஹறு மஹறுவையும்
அறிந்துளத்திற் றேடு. குன்

சரணங்கள்

1 கதிரொளி வீசியிலங்கும் காபகௌ ஸைனினடுவிற்
கதிராடிப் பாடிவரும் சற்குருவைத் தேடு குன்

2 ஆயிரத்தெட் டிதழ்விரியும் அமரர்புகழ் ஜன்கலிகா
காயிலாநற் கனியாங் கரிவெழுத்தைத் தேடு குன்

3 முச்சுடரு மோரலிபாய் முங்கிநின்ற தாத்ததனில்
அச்சுடரி லொன்றுய்வரும் அறவீநபியைத்தேடு குன்

4 ஆலமறு வாகுமிதால் அஜிஸாமின்ஸா னுனவர்
வாலகுரு நம்பிறசூல் வருவார்சதாதேடு குன்

5 கொண்டகோலம் இன்ஸானென்பார் குருவறிந்தேன்காமி
தொண்டன் ஹம்சுர லெப்பை யென்போன்
மொடுத்தே னிதைப்பாரும்.

12-வது-பதம்-இராகம்-ஆனந்தபைரவி-சாப்புதாளம்.

பல்லவி

தன்னை யறிவது பறுலடி பானே தன்
தலைவனை யறிவது சுன்னத்தா மடி த்தேனே தன்

அநுபல்லவி

பின்னை யறிவதில் நா முன்னே யறிவ தென்று
தாசிகே அபுல் காசிம் நந்நபி
தங்கள் மறைப்படி எங்கு வோதினர். தன்னை

சரணங்கள்

1 மன்னறப நபுசகு என்னடிமானே-இதின்
மஹனு வறியார்க் கென்னசொல்வே னடிதேனே
பின்னேவரும் பகத் அறப றப்பகு என்றும்
பேசினுர் பெரியோன் முகம்மதே
பெருமை யுடனிதை யறிய வெவர்க்குமே (தன்னே)

2 கண்ணி னிடையி லென்னடி மானே-அங்கே
காண்பதற் கொன்றுமில்லே காட்சிகளடி தேனே-கண்
தன்னேமுன் னறிந்தல்லவோ தனதுபொரு ளறிவது
தடிய ரிவைகளே யறியார் கொடியவர்
நொடியி லெமன்கையிற் பிடிரி மாவர்கள். (தன்னே)

3 மூன்னே மூளேமுனே யடிமானே-நின்று
மூளேத்து மானேகஜென்மம் வெளியாஞேமடி தேனே
அன்னு ளதற்குமுன் னனேககால மெங்கிருந்தோம்
அந்த ரகசிய மறிந்த ஷெய்கிடம்
அடுத்தே யவர்மொழி தொடுத்தே நடந்துகொள் (தன்னே)

4 அற்ப ஜலத்தி லென்னே யழைத்தோன்-எனக்
கன்று மிஸ்குக்குந் கொடுத் தாதர வுடன் வளர்த்தோன்
கெற்பக் குவளறையிற் கிடத்தி யமு தூட்டினவன்
அப்பனு யுல காளும் றப்பவன்
அஹ துவிலே சமதான பெரியவன் (தன்னே)

5 இன்பக் தருமதி ஞுநகர் வாழும்-எங்க
ளிறசூல் நன்னபி நாயகம் மெடுத்தோதினுர் நாளும்
அன்புகொண் டதன்படி யறைந்தோன் நின்வர்க்கெல்லாம்
வம்பனுமிந்த ஹா் சாவென்போன்சொல்
நம்புவீ ரரு ளென்பி ரான்தாரும் (தன்னே)

13-வது-பதம்-இராகம்-ஸரஸாங்கி-ஆதிதாளம்

பல்லவி

ஹாவதற் கப்பால் என்னடி-குருவறியாப்
பாவிகட் கென்ன கெதியடி (ஹாவ)

அநுபல்லவி.

மாமாய் மணியதாய் மௌமுச் சுடாரதாய்
மறைந்த சுன்சுல மருபியா னிறைந்தவான் பொருளெனும் (ஹா)

சரணங்கள்

1 அலிபாயெழுந்த தென்னடி-அதற்குமுன்னே
ஆதியிருளு மென்னடி
கலிமாவில் பனு லென்னடி பகரவுமென்ன
கலிமாவில் பனு ஹயாத் தென்னடி-அழகொளிதருமொரு
வலியோ னருள்தரும் வடிவுதாத் திஸ்மதே
வந்த மௌனமணி மந்திர மோசை
நந்தி றாகுல்கு றாசேதும் தானவுர்
தான் தான் தனிகினை வெனமன மினமுனைச் சொனதௌ
தினியகண் மணியுன தருள்வரச்
சங்கை தங்குமக ராஜ ராஜர்நபி
திங்க ளானவடி வெங்கள் கம்மதுவாம் (மாவாய்)

2 தீனில் மஹனு வென்னடி-தீனென்றதென்ன
தீனி னடப்பு மென்னடி
தௌஹீதின் மஹனு வென்னடி-தனித்த ஈமானிஸ்லாம்
தனக்கும் வகையு மென்னடி-திடமுட னருள்தரும்
தானேன் திருத்தூதர் தயவார் மறைமொழியைத்
தீனே ரானவரெல் லோரு மேயறியத்
தீர்க்க மோடுரைத் தார்க்கும்பல னைத்தரத் (தான்)

3 ஈமான் தலைதா வென்னடி—இதின் கண்செவியென்ன
ஈமான் வாய்தானு மென்னடி
ஈமான் கைகால்கா தென்னடி-இதில்கல்புமென்ன
ஈமான் வயிறு மென்னடி-இறையருள் தருமொரு
கோமர் னந்நபிக்கிறை குறு ஆன் ஷரிபிற் சொன்னுன்
குருவாம் நன்னபியுந் திருவா யால்மொழிந்தார்
கூறினார்க ளிமாம் பாரில் கித்தாபுகளில் (தான்)

4 கலிமாக் கெத்தனை பறுவடி ஷறுத் தெத்தனை
கலிமாப் பிறந்த தெங்கடி
கலிமாச் சொன்ன தாரடி-அது நமக்குக்
கனத்த பறுலான தென்னடி-சருவி லுருவாய்வரும்
அலிமா துலரிதனை யறைந்தா ரதன்படியே
ஆரி பீன்களொளி மார்களுமே சொன்னார்
பாரிஹம்ஸாசொன்னேன்!படைத்தநம்பிறைசொன்னுன்

14-வது பதம்-இராகம்-சங்கராபரணம்-சாப்புதாளம்

பல்லவி.

எழுத்தோடு முக்கோணச் சூட்சமெங்கே யிருந்து
ஏறி யிறங்குது சொல்வீர்.

அநுபல்லவி

கொழுந்துவிட்டெரிகின்ற குகைக்குள் குன்னென்றோர் சத்
பிறந்தவகை தானென்ன பீரே யெனக்குச் சொல்லும் [தம்

அன்ப ரிம்ப ரும்ப ரென்பரும்
நம்பி யடிதொழும் எனபிரா னிறை
வந்த வதிசய மிந்த வுலகினில்
அந்த முடன்சொல் வென்தன்நாவு போதா (தெழு)

சரணங்கள்.

1 அல்ஹம் தென்றுரைத்த சொல்லைத் தாய்ப்பிரிந்து
ஐயைந் திருபத்தைந் தான தென்னகாண்
கல்பென் துரைப்ப தென்ன கமலபொற் பாதமென்ன
கலிமா நிலையு மென்னகாண்.

கல்பில் நின்றொளிரும் மெய்ஞ்ஞானச்
சூட்சம் பொருளென்ன
சுல்தானன் னவீறுவென் றுரைத்த
தெதுகாண் சொல்லும்,

2 ஆலம் அறு வாஹென்ன ஆலமிதா லஜிஸாம்
ஆலம் இன்ஸானு மென்ன காண்
மூலப் பதியுமென்ன முடிவற்ற பொருளென்ன
முஃஜி சாத்தான தென்ன காண்.

மேலத்தெருவில் வாலக்குருவின்
வடிவதுமென்ன
மெய்யுள் வந்திலங்கும் ஐம்புலன்கள்
செய்குண மென்னகாண், (எழுந்)

3 ஐம்பத்தோ ரட்சகம் அடங்கியொன் றுனதென்ன
அழியாப் பொருளு மென்ன காண்
இன்பந் தருங்கலிமா அஷஹது அன்லாஇ லாகாவில்
எத்தைக்கண்டு ஷாட்சிசொன் னீர்காண்.

அம்பா புகழுமெங்க ளருமது
நபிக் கடிமை
வம்பன் ஹம்சா ரொல்லிதற் கென்பால்
ஜவாபு சொல்லும் (எழூந்)

15-வது-பதம்-இராகம்-இந்துஸ்தானி-காபி-சாப்பு தாளம்

பல்லவி.

மோன மௌன ஞான தியானம் செய்மனமே
முஸ்தபா நபியின்மேல்-முர்த்தலா நபியின்மேல்
முஸ்தபா நபியின்மேல் மோன,

அநுபல்லவி.

தேனொழுகும் தீன்கலிமாத் தீபமுச்சுட ராய்வந்தோர்
மானோடுரை பேசும் யாறசூல்-மறைநபி நாயகமேல்
நறநபி நாயகமேல்-இறைநபி நாயகமேல். (மோன)

சரணங்கள்

1 அஃயான் தாபிதா வுடனே-அஃயான் காரிஜா வறிந்து
ஆதிதூதைத் தேடுநீ மனமே-அல்லாகு மகியு மறிந்து
அல்லாகு நாலி றுன்னறிந்து-அல்லாகு ஷாஹீ தியறிந்து

2. ஹையுல்கையூமாகநின்றோன்-கஃஹார்ஜப்பாருய் நிறைந்தோ
மெய்யுள் வந்துறைந்தோன் றாதிறசூல்மக்கமகு மூதரின்மேல்
சொர்க்கமகு முதரின்மேல் ஹக்கன்மகு மூகரின்மேல் (மோ)

3 குல்ல யவ்மின்ஹூவ பீஷவுன்குதாயின் வேதத்தின்படியே
அல்லும் பகலும் ஹம்சாசொன்னேன், அரசர்நபிநாயகமேல்
முறுசல்நபி நாயகமேல், குறைஷநபி நாயகமேல். (மோன)

16-வது-பதம்-இராகம்-சுருட்டி-ஏகதாளம்

பல்லவி.

சுழிமுனை யறிந்தே சுகம்பெற நாடு
சுல்தான் தஸ்தகீர் கௌதூல் லகுல்த்தை தேடு-ஏ (சு)

அநுபல்லவி

வழிபா டறிந்துகொண் டேபடியேறு
வாசியுடன் கலிமா நினைப்புடன் கூறு
தெளிவான முச்சுடர் தன்னிலே சேரு.
திங்கள் முகம்மது நபிவறு வார்கள் பாரு. சுழி

சரணங்கள்

1 ஆலமெல் லாம்படைத் தாள்கின்ற றகுமான்
அவனன்றி வேறொரு கெதியுண்டு மோகான்
மூலமாயெங்கும் முளைத்த சித்தவன் தான்
முச்சினோ டிணங்கிநின் றூடிய பொருள்தான். சுழி

2 நாளைக் கிருப்பது நாமறியோமே
நாயன்சொற் கட்டளை போனடப் போமே
மூளையுருகுமப்போ தார்துணை யாமே
முறுசல்க் கரசர்வந்தால் ஜெயம்பெற லாமே. சுழி

3 அடிமுடியில்லா அஹதெனும் பொருள்தான்
அறிந்தவர் திறந்திறந் திறந்திறந் திறந்தான்
புடிமீதி லிதையெடுத் தோதும் ஹமஸாதான்
பகர்ந்தேன் அறிவாளர்க ளறிந்திடில் நலந்தான்

17வது-பதம்-இராகம்-சுருட்டி ஏக தாளம்

பல்லவி

அஞ்செழுத் தானதிற் பிஞ்செழுத் தென்னடி

அநுபல்லவி

நெஞ்சி லிருந்த பஞ்சபூத-அதிற்
கொஞ்சிங் குயில்மொழி யோர்நீதம்
வஞ்சமகற்றியெனக் கின்யொல் தருந்தரும்
வள்ளல் நந்நபியெனும் நாயகந் தான்சொன்ன. அஞ்

சரணங்கள்

1 அல்ஹம் தெனும்புதய லான தறிந்தவர்
ஆவென் றதின்வபாருளையு மறிவார் கலி
மாவென் றதின்பொருளையு மறிவார்
கூவா யிலங்கிடும் ரகாஜா முகம்மது
கோ மானந் நபியெனும் நாயகந்தாம் சொன்ன. அஞ்

2 இஸ்முல் லகுலமை யறியாதாள் ஜாகிலாய்
இறையை யவனறி யானெனன் றோதினர்-ஆதி
மறையையு மவனன்றி யானெனன் றோதினர்

நறையே கமழும் பூங்காவனமக் காவினில்வாழ்
நந்திருந் நபியெனும் நாயகந்தாம் சொன்ன. அஞ்

3 ஐம்பத்தோ ரட்சரம் நம்பிப் பிடித்திடார்க்
கின்ப மொருபொழுது மில்லையாம்-அவர்
துன்ப வினைகளுக்கோ ரெல்லையாம்

அன்போ டறைந்தே னடிமை ஹமசாவே யார்க்கும்
ஆலநந்நபியெனும் நாயகத்தின் சொற்போல். அஞ்

18-வது-பதம்-இராகம்-சங்கராபரணம்-ரூபகதாளம்.

பல்லவி

அஹத்தானவன் வேத மதன் படியன்னமே அஞ்சு மாறுமறிந்திட
மருமூத ரெனுமன்னர் சொன்ன ரெடி முன்னமே. அஹ

அநுபல்லவி

ஜெகமீதினி னுள்ள முஸ்லிம்கள்
ஜென்னப் பதிசேர் அண்ணல் முகம்மதே. அஹ

சரணங்கள்

1 ஈமான் தனிலே சொன்னர்கேளும் ஆறுகாரியமே
யிறையோன் சொன்ன கட்டளை
ஆமநதுபில் லாகி யுடனதைப் பாருமே

மூமின் தனமுள்ள முசிலீம்கள்
முஸ்தபா நபிசொற்போல் நித்தியமும் நடப்பார்கள் அஹ

2 கலிமாத் தொழுகை நோன்புடன் ஸக்காத ஹஜ்ஜுமாய்க்
கட்டினர் குறு ஆனிலே
சலியாம லதன்படி நடக்கவே யச்சமாய்

வலியோன் றூதர் வள்ளர் முகம்மதே
வாசமுடன் மறைப் பாஷைகொண்டோதினர். அஹ

3 இறையோன் றனக்கீகான் கொண்டவர்கள் யாருமே
யிதைக்கேட்டு நன்றாகவே
முறையான கலிமாவை மூச்சுடனேதுமே
குறையா மதிபோல்வளர் நங்நபி
நுறினர் யாவர்க்கும் பாரில்ஹம் சாசெர்ன்னேன் (அஹ)

19-வது-பதம்-இராகம்-பியாக்-ஹிந்துஸ்தானி-சௌதா தாளம்.

பல்லவி

கலியுடன் மாவான தென்ன காபிலென் ஷெய்கே
ஹா ஹீ ஹூ கும்

அநுபல்லவி

கலிமாவே கதியே காட்டும் அருள் துதியே
காட்சி தரும்தம் கூத்து நிதியே (கலி)

சரணங்கள்

1 ஈன்ற மாதாபிதா எடுத்துரைத்த மந்திரமோ
இறையருள் தருங்குரு மந்திரமோ.
இல்லல்லா வென்ற மந்திரமோ
கூலாஇ லாக வதுவோ ஹ ஹீ ஹூ கும் (கலி)

2. பன்னிரண் டெழுத்திற் பதிந்த மூன்றெழுத்தோ
பகரும் கலிமாவி னுயிரெழுத்தோ
உன்னும் யாகூவென்னுந் தீக்குரோ
வுறுதி அல்ஹம்தமிவோ ஹா ஹீ ஹூ கும் (கலி)

3. ஆசையோ நினைவோ அழகு வெண் மணியோ
ஆடுங் கருவோ கூடோ வுயிரோ
ஓசை தரும்நல் லொளியோ
வுடையோன் அலிபு நிலையோ ஹா ஹீ ஹூ கும் (கலி)

4 உடலோ ஹயாத்தோ வுவப்போ வுதிரமோ
வுணர்வோ குளிர்மையோ, என்குருவே
உடுமைஹம்.சாக்குறைப்பீர்
அருளஞானக்.கண்திறப்பீர் ஹா ஹீ ஹூ கும் (கலி)

20-வது-பதம்-இராகம்-லாவணி ஏக தாளம்.

பல்லவி

வாவாவாடி கூவுக்கப்பாலே தேடி-அருள்
முப்பாலை நாடி யொன்றை குப்பாகப்பாடி வா

அநுபல்லவி

பூவிலுறை வாசம்போற் பொருந்தியெங்கும் நின்றதையே
பாவியென்போ லானவர்கள் பார்ப்பாரோ பட்சமுடன்
ஆவி யொடுங்குமுன்னே அஞ்சிலொன்றை நாடி-மனங்
கெஞ்சி நித்தம்வாடி-யிறை தஞ்சமெனப்பாடி. வா

சரணங்கள்

1 முத்திவழி யறியாமல் முறுஷிதின் கோலங்களென்றே
புத்தியுடன் சொல்லுகிறாய் போதமுண்டோபேதைநெஞ்சே
குத்து நுக்கத் திட்டகுரு வட்டமென்ன போடி-யதை
விட்டுமிங்கே வாடி யொன்றைத் திட்டமுடன் பாடி வா

2 பார்க்கப் பலவிதமாய்ப் பஞ்சவர்ண மஞ்சதுவாய்
மார்க்கந்தனில் விரிவாய் மறைந்ததுவா மென்மனமே
ஆர்க்குந் தெரிந்த அவ்மக்கலி மாவைத்தேடிக்
கருவெழுத்தை நாடி யுருவெழுத்தைப்பாடி வா

3 பாட்டைப் படித்ததனின் பலனறியாயோ மனமே
காட்டினேன் ஹம்சாவுங் கண்டறிவா யென்மனமே
நாட்டினு ரொன்றறி னலமறியார்காபிர்
ஐம்புல னறியார் காபிர் வந்த வழியறியார் காபிர் வா

21-வது-பதம்-இராகம்-முஹாரி-ஆதிதாளம்

பல்லவி

ஹூவதற் கப்பாற் குருவே நீர் சொல்லும்
குணங்குடி யிதுதானே-வீணில்
மாவென்றும் மணியென்றும் நுக்கத்தென்றும் ஐனென்றும்
மருட்டா தென்னிடந் தானே (ஹூ)

அநுபல்லவி

மாவென்றும் ஜனென்றும் மதிப்புடன் சொல்வார்
மனுடர்கள்சிலர் தானேசொல்ல
நாவினு மடங்கான் நாதத்தினுறையான்
நம்பிக்கொள் ளிதைத்தானே. ஹூ

சரணங்கள்

1 கூறும் வலம் புரிச் சங்கத்தினேசையாம்
நூறுமு கம்மதியா யதை
வேறுகண்டவர்கள் காறினில் விழுந்து
வந்திடுவார் நரகாம். ஹூ

2 தௌசின் மேலிருந்த தலைவனையறியாத்
தடியர்கள் கெடுத்தானே முன்னர்
கபுசுடனறுஷேறும் ஹாமீமுகம்மதர்
காட்டினர் ரிதைத்தானே. ஹூ

3 உணவதைவெறுத்து முயிர்நிலையறிந்து
முணர்ந்துகொள் திடந்தானே காசு
பணமெனவெண்ணி ஹக்கனைதுதியாக்
கல்பது மருள்தானே.

ஈமான் இசுலாத்தைப் பற்றியது

22-வது இ-ம்-நாதநாமக்கிரியை-ஏகதாளம்

பல்லவி

அறிந்து கொள்ளுங்கள் முஸ்லிம்களே அறிந்

அநுபல்லவி

அறைகிறேனயீமா னிஸ்லாமைமந்து
மறையினிறையவன் தானேதினன்
மன்னர் முகம்மது நபியுஞ்சொன்னர். அறிந்

சரணங்கள்

1 அறிவீர் ஆமந்து பில்லாகியாம்
அல்லாவொருவனென் றறிகிறது
நெறியாய்வமலாயிக் கத்தியென்றால்
நேசமலக்குக வுண்டென்பதும்

குறியாய் வகுத்பிகி யென்பதே
குதாயின்வேதங்க ளுண்மையென்றும்
தெரிந்துகல்பினி லறிந்தவர்கள்
தீனோராவரென் றிறசூல்சொன்னார். அறிந்

2 இன்னங்கேளும் வறுஸ்லிகியாம்
ஏகன்றூதர்க ளுண்மையென்றும்
சொன்னேன் வலயமில் ஆகிரியாம்
சூழும்கியாமநாட் கடைசியென்றும்
பின்னேவருநன்மை தின்மையிரண்டும்
பெரியோமரமனென்றும் அறிவீரின்னம்
முன்னோன்வஸிபாத்துகள் நாற்பதுடன்
முடிகியறியுங்காள் முஸ்லிம்களே. அறிந்

3 காக்கும் இஸ்லாத்தின் முதலாவது
கலிமாஷஹாதத்து அஷ்ஹதென்றால்
தீர்க்கமுடனேயான் கண்டுசாட்சி
திடமாய்ச்சொல்லுவே னென்றேதல்
சேர்க்கும் அந்தா இலாப்பொருளே
ஜெகத்தில் வணங்கவே தகுமானவன்
பார்க்கும் இல்லல்லா அல்லாவென்றும்
பகர்ந்தேனிவைகளை யறிவீர்களே. அறிந்

4. கேளும்இன்னமோர் அஷ்ஹதுயாம்
கண்டுசாட்சியான் சொன்னேனெனறும்
நாளு அன்னமு கம்மதுற்றசூ
லுல்லாகியின்பொருளைப் பாரும்
வாழும்நம்மிறை தூதர்நபி
வரிசைமுகம்மதென் றறிந்துளத்தில்
நாளும் நாயகனைத் தொழுதோர்கட்கு
நபியின்ஷபா அத்தெத்றறிவீர்களே. அறிந்

5. வருமேவயிக்ப முஸ்ஸலாத்தி
வணங்குந்தொழுகையைத் தொழுதிடவும்
தருமேவயித்தா இஸ்ஸக்காத்தி
தருமமெனும் ஸக்காத் தெடுத்தளித்தல்

சுருமாநபிசௌமி றமலானியாம்
சொன்னார் முப்பதுநாள் நோன்பென்றும்
கருவர்ம்ஹஜ்ஜிஜன்ப தைந்தாவதாம்
காட்டினேன் ஹம்ஸா பாட்டிலேதான். அறிந்

ஷறஹுறின் பேணுதலைப் பற்றியது

23-வது-பதம்-இராகம்-சங்கராபரணம்-ரூபகதாளம்.

பல்லவி

ஷறஹுறதைப் பேணும் ஜனனப்
பதிசேர லாகாணுறசூல்

அநுபல்லவி

மாணங்கள் வந்திடு மதிமோச மாகிடும்
மாநிலத்துள்ளோரே—அந்தத்
தருணங்களுமக்கொன்றும் செய்யவுங்கூடாது
தனியோனைத் தொழுதுகொள்வீர். றசூல்-ஷ

சரணங்கள்

1 எண்சாணுடம்பிலி திருக்கும்பொழுதே
இறையோனைத் தொழுதுகொள்வீர்—கெட்ட
கஞ்சாவுடன் கள்ளரக்கும் மஸ்தெவையும்
ஹறுமென்று தள்ளிடுவீர். றசூல்-ஷ

3 ஆவியொடுங்குமுன் அஞ்சிலொன்றுனதை
யறிந்துவணங்கிக் கொள்வீர்—மஞ்சட்
காவிவஸ்திரங்கட்டிக் காடெல்லாந்திரிந்தாலும்
ஹக்கனைத் தொழுதுகொள்வீர். றசூல்-ஷ

3 தொழுகையைவிட்டுக் துட்டர்தங்களுக்குச்செய்
துன்பமது தனைக்கேள்—பாவி
அழுகைநரகத்தில் மெழுகுபோலுருகுவார்
அநியாயமென்ன சொல்வேன். றசூல்-ஷ

4 கள்ளுச்சாராயங் கலந்துகுடிக்கும்
கசடர்கள் தங்களுக்கு—அவர்கள்
முள்ளெல்லாம்வெந்து முழுதுமேசாம்பலாய்
மோசத்தி லாவாரே. றசூல்-ஷ

5 பஞ்சபூதங்கள்செய் அஞ்சின்குணங்களைப்
பாரி லறியார்க்கு—நாளைத்
துஞ்சவதைத்து நமனுயிர்வாங்குவான்
தோஷியரே கேளும். றசூல்-ஷ

6. பாவிகட்காயிரம் புத்திசொன்னாலும்
படைத்தோனை வணங்கார்கள்—எமன்
ரோவினைசெய்யும் பொழுதல்லோ நினைப்பார்கள்
நீசர்கட்கென்ன சொல்வேன் றசூல்-ஷ

7 சொல்லச்சொல்லச்சுணை வாராதுகாண்
சுன்னத்ஜமா அத்துக்கல்லாது—பற்ற
வெல்லா மெழுபத்திரண்டு கூட்டமிப்படி
யாவார்கள் கால்சறுகி றசூல்-ஷ

8 முத்திலுதித்திடு முஸ்தபா நந்நபி
முறையான மார்க்கந்தன்னைச்—சொன்னேன்
பத்தியொடு முகம்மது ஹம்ஸாலெப்பை
புத்தியென்றறிந்து கொள்வீர் றசூல்-ஷ

24-வது பதம்-இராகம்-ஸஹானா-ஆதிதாளம்

பல்லவி

கந்தங்காதங்கமழ்வீசும் பரிபூரணகாசிமே
கா-ஹா-யா-ஐன் சாதெனும்நபியே
கருணைபுரிந்தருள் ஹாமீமே

அநுபல்லவி

முந்ததூக்கத்திருளாம்-அலிபாயவரும்
முந்தொடுபச்சை பவளமதாய்ப்
விந்தமயில்வடிவாக எக்கினமரம்
பொங்கிய முழுமணி மகுமூதாம். கந்தம்

சரணங்கள்

1 முச்சுடர்வட்டமே சக்கரமாகியே
மூலக்கொலுக்கிங் கரகனத்தில்
அச்சுடாவட்டத் திருந்தவளைத்தொழ
யாறறிவாரிந்தப் பாருலகில்.

உச்சியின் கீழே யுலாவி வருமொழி
 வூசி முனைத்திரு வாசலிலே
வச்ச பொருளை வகைதெரிந்தோதிட்
 வருவீர் குணங்குடி யருள் நாதா கந்தம்

2 வட்ட வடிவினில் விளைந்ததும் வெள்ளை
 வடிவு துலங்கும் விரிவாக
மட்டிலடங்கா வொளிவு மக்காமன்
 மருமூ தாகிய கண்ணாடி
விட்ட நிறம் சுறு மாவது நீலம்
 விளங்கிய வேதப் பொருளாதி
திட்ட மிகுந்த அரூப சுரூப
 தியான மதைத்தின மறவாதே கந்தம்

3 குத்து நுக்கத்தொடு குருவருள் சுக்கூன்
 குமரியின் வட்டக் குருவடியைச்
சித்தத்தினி லேற்றித் தனையே நித்தம்
 சேவித் தாலுமுட் பொரு ளறியான்
கந்திக் கத்திக் கமல மீதிடைநடுக்
 கண்டேன் முறுஷிதன் கோலமென்றே
முத்திப் பொருளறி யார்கன விலுமவர்
 முஸ்லிம்களே ஹம்சா சொன்னேன் கந்தம்

———

25-வது பதம்-இராகம்-கமாஸ்-ரூபகதாளம்

பல்லவி

அஞ்சினி லொன்றை யருள்வாய்
அஹதானவா அஹதானவா சமதானவா வுன்

அநுபல்லவி

அஞ்சினி லொன்றருள் நெஞ்சில்தியா னஞ்செய
 அருமைத்தவ மொருமைப்பொருள்
 குருமெய்த்திடும் பிரகாசநல்

சரணங்கள்

1 அவ்வலில் அஹதாய் நின்றோனே அகுமது முகம்மதாய்
இவ்வுல கெல்லாம் நிறைந்தோனே

கௌவு நற்கலிமா வானோனே கருவாக வுயிரங்கும்
துவ்வு மைம்பொறிக ளானோனே

பௌவஞ்சூழுல கெல்லாம் படைத்தவா
பார்வை கேள்விபேச் சேழுசி பத்துடன்
செவ்வை அல்ஹம் து லில்லாஹி யென்றவா [ருள்
செறியுந் திருமறைநான்கினிலுறையும் பொருளிறையுன்ன

2 தந்தையுந் தாயு மானோனே தன்னந் தனிப்பொருளதாய்
முந்தவு மிருளாய் நின்றோனே
சிந்தையுட் சிறந்த வாசனே சுரரோர் நரரோரும்புகழ்
உந்தியி லுதித்த ராஜனே

வந்த அம்மாறு லௌவாமா முல்கிமா
வளருமுத் மாவும் ருலியா மறுவியா
விந்தை காமிலா தன்னில் நிரப்பமாய்
வருவா யருள் புரிவாய்நிதம் குருவாரிற சூல்சொலிகலி அ

3 ஜெனனத்திற் சிறப்புமீந் தோனே ஷஹாதத்துக் கலிமாவில்
அன்னுக்குள் அறிவாம் நின்றோனே
என்னுக்கு விளங்கும் நேசனே எங்கு நிறைந்த வஸ்துவாய்க்
குன்னுக்கு ஐனு மானோனே

தன்னுக்குட்டன தாகவுரைத்திடுந்
தற்பர மெய்ப்பர நற்பர ஞானவா
கண்ணுக் குள்மணியாகிய முன்னவா
ககனோர்புக ழகமேமகிழ் தருமாநபி மகுமூதர்சொல் அ

4 ஆவியின் கருவாய் நிறைந்தோனே அண்டபிண்ட முழுதெங்
கூவிலும் நிரப்பம தானோனே [கெங்குமே
பாவியென் பிழையைப் பொறுப்போனே படிமீதினிலுனைப்
நாவிலுமடங்கா நாதனே [புகழ்

கூவி யைம்புலனும் பொறியு மொன்றாய்க்
குருவறிந்திலாப் பாவியா ஞானதாய்
நோவினை யடராமல் ஹம்ஸாவிக் குன்றன்
நேசங்கலி வாசம்மருள் ஈசனிந்தத் தாசன்கன அ

26-வது-பதம்-இராகம்-செஞ்சுருட்டி-ஏகதாளம்

பல்லவி

அறிவீர் முகம்மது நபிக்குப் பதினேந்
தடையாளம் பாரில் அறிவீர்

அநுபல்லவி

நெறியார் முகம்மதர்க் கடியுந் தோயாது
நிழலில் சாய்கை யில்லை அறிவீர்

சரணங்கள்

1 பதிவாம் நபிமுடி அறுஷின்மேற்
பாதந் தருத்த ரூவின்கீழ்
கெதியாக முன்கண்ட பார்வையதுபோற்
பின்னுமே காணும் அறிவீர்

2 மருளூதர் நபியை மண்பூச சேவையும்
மணந்திடா நாதராம்
தருமானநல் மேகங் குடைகவிழ்த்திடுந்
தாஹாநன் னபிக்கே அறிவீர்

3 பெரியோ நபிதிருப் பாதம் ரண்டையும்
புவியிர் கண்டோ ரில்லை
சரியாக மேற்சிர மேனிரண்டையுங்
கண்டுவிண் டோரில்லை அறிவீர்

4 புவிமீதினில் மலஜலங்கள் மனுடர
கண்டது மில்லைத்
துயிலாண்ட தன்னை யொருபொழுதிலுங்
களைந்தது மில்லை அறிவீர்

5 ஜெகமீதினில் நகரோமம் நபிக்கி
வளர்ந்தது மில்லை
அகமானதிற்போத மொருநாளும் நபி
மறைந்தது மில்லை அறிவீர்

6 காதவழிகஸ்தூரி யெண்டிசை
கமழும் ராஜரா மிந்த
வேதியன் ஹம்ஸாக் கவர்திருப்
பாதகன் மலராம் அறிவீர்

27-வது-பதம்-இராகம்-தன்னியாசி-ஆதிதாளம்

பல்லவி

தூக்கந் தெளிந்திடுவாய்—உன்னித்திரை
நோக்கமறிந்திடுவாய்

அநுபல்லவி

ஆர்க்கும் கருவமைத்துக் காக்கும் ஹக்கை துதித்தும்
பார்க்கவே மனநினைத்து அனுதினமும் தூக்

சரணங்கள்

1 காணும் ஷரி அத்துடன் கனத்த தரீக்கதையும்
பூணும் ஹகீக்கத் மஃறிபா இதையறிந்து

2 பாறும் பறல் வாஜிபு பகரும் கன்னத் முஸ்தஹப்
ஆருமறிந்து நடந்தே அனுதினமும் உன்கண்ணில் தூக்

3 அல்லும் பகலுமற்ற எல்லையறிந்து சற்றே
தில்லைத்திறந்து நித்தமும் உன்னுக்குள் நீயே யுன்கண்ணில்

4 கத்தன் முஷாகிதாவும் கனத்த முருக்கபாவும்
நித்தங்கலி மாப்பொருளும் அறிந்து முன்னுள்! தூக்

5 ஊணைக் குறைத்து முன்றன் னுடலை மெலியவைத்து.
ஆணிக்கலி மாப்பிடித்தே யனுதினமு முன்கண்ணில்வரும்

6 நுதி யருள் கிடைக்கும் ஓதியுணர்ந்தவர்க்கு
வேதியன் ஹம்சா சொன்னசொல் இதையறிந்து தூக்

28-வது-பதம்-இராகம்-பியாக்கு-ஆதிதாளம.

பல்லவி.

பாருமென்றன் கோலங் தஞ்சம்
கன்சுல் மகுபியா பார் பார் பாரும்

அநுபல்லவி

சேரும்சுஜூதிலே ஷெய்கே உஜூதிலே
நூறுமு கம்மதிய்யா பார் பார் பாரும்

சரணங்கள்

1 ஆடும்சு வாசமே யோடும்ப்ரகாசமே
வேடிக்கை யாசனத்தில் பார் பார் பாரும்

2 ஐவேட ராடுறூர் ஆனந்தம்பாடுறூர்
மெய்வேட ரானவரைப் பார் பார் பாரும்

3 ஆறுதரத்தில் பாராய் சரத்துளே
வேராதி மூலத்திலே பார் பார் பாரும்

4 எங்கு மிருப்பவன் என்னுக்குளானவன்
இங்கும் ஹம்ஸா சொன்னவன் பார் பார் பாரும்

29-வது பதம்-இராகம்-முஹாரி-ஆதிதாளம்.

பல்லவி

ஐம்பத்தோ ரட்சரத்தினுள்ளே
அடங்கும் வட்டச்சூட்சமோ ரலிபுநூனுக்குள்ளே. ஐம்

அநுபல்லவி

நம்பினோர்க்கின்பஞான போதம்-தரும்
நவின்றமுச்சுடரில்வந்த தீபமைந்துபூதம் ஐம்

சரணங்கள்

1 லாஇலாக இல்லல்லா வென்றோது-நம்பி
லாமவுஜூத இல்லல்லாவை நாட்டமுடன்றேடு
ஒப்பில்லாமல் உந்தியின் கீழ்நாடு-நின்றே
யுதித்தெழுந்தசுழிமுனை யுவந்து நித்தநீகூடு ஐம்

2 எழுவாசலேழு வீடுறைந்து-சென்றே
இருக்குமப்புறத்திலே யிலங்குமே தெளிந்து
வாழுவாசல் மூலமே யிருந்து வந்த
வடிவுசங்கினோசை கமலரூபசாதா-வந்து ஐம்

3 குன்னெழுந்த ஹுப்புதாத்து மானேன்-எங்கும்
குதித்தெழும்பும் டின்பயக் கூனென்றமொழியானேன்
தன்னொளியிற்றான் தரித்த தானேன்-எங்கும்
தானேதானேதானேறப்பில் ஆலமீனுமானேன். ஐம்

4 அலிபவே நுக்கத்து மூன்றுமாகி-யந்த
அட்சரஞ்சுழித்து ளாமலிபுமூலமேவி
மெலிவில்லாதாலுமீமு மாகி-யார்க்கு
மெய்யுள்வந்துறைந்த தம்மென்றட்சரமுமாகி ஐம்

5 மூலமாயெப்படைப்பு மானேன்-வந்த
முத்துபச்சைரத்னமோடு முப்பொருள்தானேன்
கோலமெவ்வுயிர்க்கு றப்புமானேன்-இந்தப்
பாலன்ஹம்ஸாலெப்பை பிழையும்பொறுப்போன். ஐம்

30-வது-பதம்-இராகம்-சங்கராபரணம்.

பல்லவி

தன்னையறிவதில் முன்னேயறியதைத்
தயவாயென்முன் சொல்வாய்-உன் தன்

அநுபல்லவி

அன்னைவயிற்றினி லாதரித்தேயென்னை
யாறுதலைசொல்லித் தோற்றினேன்-அவன்
றன்னைபறக்கவும் என்னைமதியோட
தானேதானேதானேயெங்குந் தானுகின்றவன் தன்

சரணங்கள்

1 ஆதியனாதியும் வேதமகிமையும்
ஆரறிவாரிந்தப் பாரிலே-வரும்
சோதியாரெங்கும் சுரூபமதாகியே
சூட்சசூட்சமெங்குஞ் சூட்சப்பொருளாகின்ற தன்

2 அலிபொடுலாமும் அஹதுஹேமீசையும்
ஆனதோர்தாலில் அழகாக்கினேன்-எங்கும்
கலியுடன்மாவுங் கலதுயிர்கீவனுய்க் [தன்
கருவாய்க்குருவாயெங்குமுருவா யொன்றாய் நின்றவன்

3 ஓசையுடனோர் நுக்கத் தெழுகான்கட்சரமாய்
உருச்செய்தென்னைவெளி யாக்கினேன்-இந்தத்
தாஸன்ஹம்ஸாக்குனதருள் தாராய் முகம்பாராயோ
தஞ்சம் தஞ்சமுன்றன் தஞ்சமென்னை ரட்சித்தருள். தன்

31-வது பதம் இராகம்-கமாஸ்-ரூபகதாளம்

பல்லவி

மார்க்கப்படியைத் தொடித்துத்தொழுவாய் எங்கள்
மன்னர்யாறசூல் சொன்ன

அநுபல்லவி

ஆரக்குமறைப்பார்நபி பார்க்கக்குருஆன்ஷரீபில்
தீர்க்கமுடனறிந்து தினமுனமிறைவனே மார்க்

சரணங்கள்

1 அஞ்சொகுத்தும் வணங்கார் நெஞ்சினிலிருளாம்
அதபுடன்ஷறஹறதை யெடுத்தவர்க்கருளாம்
பிஞ்செழுத்ததே அல்ஹம் தானதின்பொருளாம்
பெரியவன்திருமுகம்ம தேயார்க்குருவாம் மார்க்

2 நோவினைபடும்பொழு தாரையுங்காணுமே
நொடிக்குளெமனுயிரைப் பிடிக்கவுந்தோணுமோ
தீவினைபலதும்வந் தேயும்மைச்சூழுமே
திசையெல்லாமொருகுடை யாண்டாணிம்காண்நம்மள் மா

3 ஆசைகொண்டவர்நம்மை யலைந்திடச்செய்கிறார்
காசுபணமென்றே கவலைவிளைத்திடுவார்
நீசவெமன்வப் துயிர்மோசப்படுத்துவார்
தாஸன்ஹம்ஸாவேசொன்னேன் தனியோனை வணங்குவீர்

32-வது இராகம்-கமாஸ்-ஆதிதாளம்

பல்லவி

வந்தவழி யறிவாயெல்லாம்
பொய் பொய் பொய் பொய்நீ வந்த

அநுபல்லவி

ஐந்தருத்தாகிய மாமதிநகர்
அப்துல்லாபுத்திர ரகுமதர்சொல்
சிந்தையிலேதுந் தியானமொன்றாய்க்
செய் செய் செய் செய்நீ வந்த

சரணங்கள்

1 குன்னெழிந்தருள் கூவுங்குயின்மொழி
கூறும்வலபுரி யட்சரமே

கூவுக்கப்பாலே தெளிந்தவர்க்கேயருள்
மெய் மெய் மெய் மெய்நீ வந்த

2 கற்பனிலையறிந் தெண்ணினவர்க்கென்ன
கஞ்சாவுங்கள்ளு மரக்குங்காண்
சொற்பிரட்டால்வெகு ஜாலங்கள்செய்வோரைத்
தள் தள் தள் தள் நீ வந்த

3 புந்தியுடனொரு நந்திநினைநீ
நினைந்தனுதினமவ னடிதொழவே
அந்தரமேறி யிரங்கிவந்தோர்சொன்ன
சொல் சொல் சொல் சொல் நீ வந்த

4 அண்டமுபிண்டமு மடிமுடிநடுவிலும்
ஆனதோரகுமதென் றட்சரமே
தொண்டனும்ஹம்ஸாவென் போனிதைவிண்டனன்
பார் பார் பார் பார் நீ வந்த

33-வது பதம்-இராகம்-கமாஸ்-அடதாள-சாப்பு

பல்லவி

தந்தம்ஜடலமதிற் றறித்தபதங்கதைத்
தரணிபாந்தர்கா ளறிவீரே தந்திம்

அநுபல்லவி

அந்தமுடனேதாய் மங்கைக்கேன்நம்முள்
அழகுதசைரோமம்உதிரந்தோல் தந்தம்

சரணங்கள்

1 தந்தைபங்கதுநரம் பென்புசௌவு
தரித்தமூளையுமென் றேநீயறி தந்தம்

2 மலக்கின்பங்கைக்கேள் நெருப்புமண்தண்ணீர்
மகிமைகாற்றுத்தீயா காசம் தந்தப்

3 அறிவுடநினைவு வுணர்வுபுத்தியும்
அறைந்தேன் றாஹாணிபங் கென்றே தந்தம்

4 பார்வைகேள்வியும்பேச்சு மூச்சுடன்
பகரும்நூ ஹதின்பங் கதாவே தந்தம்

5 காணுறாகுடன்றூ ஹானிரண்டும்
கத்தன்பங் காகும்ஹும் ஸாசொன்னேன் தந்தம்

34-வது-பதம்-இராகம்-செஞ்சுருட்டி- அடதாளசாப்பு.

பல்லவி

பாருந் தொகையின் ஸிற்றைப்
பாங்குட னுரைக்கிறேன்.

அநுபல்லவி.

ஆருங்கண் டதன்படியே
அமல்கள்செய் யவுங் கடனே
சேரும் சுஜூ தானதிலே
செப்பினேன் மானிடரே பாருந்

சரணங்கள்.

1 சுயஹதி னிறமும் வெள்ளிச்
சூட்சம் ஷரீ அத் முகம்மத்
அபுவக மபூபக்கா லுகறு
ஆன செகப்புத் தரீக்கத பாருந்

2 அறிவாம் அவர் நிறமும் பச்சை
அருள் ஹக்கீக்கத துமறுகத்தாப்
செறிவா மகரிபு கறுப்பாம்
செய்யிதினு வுதுமா னென்றறி பாருந்

3 நிகரில்லா இஷா வின்னிறம்
நீலம் சூபியத் தலியார்
சகயிர்களு மேறியச்
சாற்றிடனன் ஹம்ஸா வானேனே பாருந்

35-வது-பதம்-இராகம்-முஹாரி ரூபகதாளம்.

பல்லவி.

சொன்ன னிறையவன் சுஜூதுசெய்
தெனேவணங்கார் காபிரென்று

அநுபல்லவி

முன்னவன் றன்னரு ளானமுகம்மது
முருசல்களுக் கருள் சிரசாகிய குறைவிறசூல் வேதத்திற்.

சரணங்கள்

1 ஹாமீ முகம்மதர் கந்த மலர்ப்பதம்
கண்டோரமுதுண்டோரென நன்றாகவேமுன்றான்மறை

2 முத்துமு கம்மத்தின் சிந்தைதனேயறிய
முப்பதுஜுசு மெப்பொழுதுந் தப்பாமலேஹாப்பாயோத

3 பூமியிற் கற்புடை யாமினர் தாம்பெற்ற
புண்ணியரென்கண்மணியாம் வெண்மகுமூதின்மறையிற்

4 தாசன் ஹாம்சா விண்டேன் நேசமுடனே யார்க்கும்
தரைமீதிற்குறை வொன்றிலா னிறைநந்நபிமறையின்படி

36-வது-பதம்-இராகம்-தேசிகதோடி-இந்துஸ்தானி-சௌதாளம்.

பல்லவி

தொழுகை யின்பே ரகுமதுவாம்
தோழர்களேகேளீர் தொழு

அநுபல்லவி

எழுத்தோ ரலிபுடன் ஹேமீம் தால்
இலங்கும் அகுமதான கோலம் தொழு

சரணங்கள்

1 நிலையில் நின்றகலி பெண்றறி
நீண்ட தரத்தின் வணக்கமதே

யுயாருக்கூகு ஹேயென்றறி
